# 9. தவறான நம்பிக்கை நோய்நிலை
## (DELUSIONAL DISORDERS)

செவ்வந்திப்பூ என்பவளுக்குச் சுமார் 40 வயது இருக்கலாம். இரண்டு குழந்தைகளுக்குத் தாய். அவளது கணவர் தொழிற்சாலை ஒன்றில் கண்காணிப்பாளராக வேலை பார்த்துவந்தார். செவ்வந்திப்பூ நல்ல முறையில் அன்புடன் அண்டை அயலாரிடம் பழகி வந்தாள். திடீரென ஒருநாள் பக்கத்து வீட்டுக் கலாவதி தன்னைப் பற்றித் தவறாகப் பேசுவதாகக் கணவனிடம் முறையிட்டாள். மறுநாள் குழாயடியில் ஜாடைமாடையாகக் கலாவதி தன்னுடைய நடத்தையைப் பற்றி அடுத்தவர்களிடம் பேசுவதாகக் கருதிய செவ்வந்திப்பூ கலாவதியிடம் சண்டையிட்டாள். வாய்த் தகராறு முற்றிக் கை சண்டையில் முடிந்தது. இந்நிலை தொடரவே அடிக்கடி செவ்வந்திப்பூவுக்கும், கலாவதியின் வீட்டாருக்கும் மனஸ்தாபம் அதிகரித்துக் கொண்டே வந்தது. ஒருநாள் செவ்வந்திப்பூவின் கணவன் கலாவதியை அடிக்கச் செல்லவே கலாவதியின் கணவனும் களத்தில் குதிக்க விஷயம் விபரீதமாகி முடிவில் செவ்வந்திப்பூ தன் கணவனை வற்புறுத்திப் பக்கத்துத் தெருவில் உள்ள புதிய வீட்டிற்குக் குடிபெயர்ந்தாள். இந்நிலையில் தன் மூத்த குழந்தைக்கு அடிக்கடி

காய்ச்சல் ஏற்படுகிறது என்று செவ்வந்திப்பூ கோடங்கி எடுப்பவனை அழைத்து வந்தாள். கோடங்கி எடுப்பவன் தலைமுடி, கோழி இறகு இவைகளை வீட்டிற்குள் கண்டுபிடித்து வெளியே தூக்கியெறிந்து விட்டுத் தற்பொழுது அவள் குடியிருக்கும் வீடு ராசியில்லாத வீடு என்றும், எதிர்வீட்டுக்காரி செய்த செய்வினைதான் குழந்தையின் காய்ச்சலுக்குக் காரணம் என்றும் கூறினான். இக்காரணத்தைக் காட்டியே செவ்வந்திப்பூ புதிய வீட்டிற்குக் குடிபோக வேண்டுமெனக் கணவனை நிர்ப்பந்தம் செய்தாள். இரண்டு மாதத்திற்கு ஒருமுறை புதிய வீடு பார்ப்பது எளிதான விஷயமா ?! உள்ளம் நொந்துபோன கணவன் தன் நண்பனிடம் ஆலோசனை கேட்டான். நண்பனின் அறிவுரைப்படி தன் மனைவியை மனநல மருத்துவரிடம் அவன் அழைத்துச் சென்றான். தனக்கு மனநலக் குறைபாடு ஒன்றும் இல்லை என்று செவ்வந்திப்பூ மருத்துவ ஆலோசனைக்கு ஒத்துழைக்க மறுத்தாள். மனநல மருத்துவர் அவளுக்குச் சந்தேகம் சார்ந்த தவறான நம்பிக்கை நோய் உள்ளதாகக் கண்டறிந்தார்.

கல்லூரியில் படிக்கும் 19 வயதான மாணவன் கோபால் சில மாதங்களாகத் தன்னை மற்றவர்கள் பின் தொடர்வதாகவும், தன்னை அவர்கள் கொல்ல வருவதாகவும் சந்தேகப்பட்டு வெளியில் செல்லப் பயந்துகொண்டிருந்தான். அவன் பெற்றோர்கள்

தைரியம் கூறியும் அவன் பயத்தால் தற்கொலை முயற்சியில் ஈடுபடவே அவனை மனநல மருத்துவரிடம் பெற்றோர்கள் அழைத்துச் சென்றனர். அவனுக்குச் சந்தேகம் சார்ந்த தவறான நம்பிக்கை நோய் உள்ளது என்று மனநல மருத்துவரால் கண்டு அறியப்பட்டது.

தவறான நம்பிக்கை நோயானது பல வகைப்படும். அவற்றுள் முதன்மையாக விளங்குவது சந்தேகம் சார்ந்த தவறான நம்பிக்கை நோயாகும். இரண்டாவதாக, சந்தேகம் சார்ந்த மனச்சிதைவு நோயாகும். மூன்றாவதாக சந்தேகம் கொண்ட பண்பியல் தொகுப்புப் பிரச்சினையாகும். இவற்றுள் முதலாவதாகச் சந்தேகம் சார்ந்த தவறான நம்பிக்கை நோயைப் பற்றி நாம் அறிவோம்.

## 1. சந்தேகம் சார்ந்த தவறான நம்பிக்கை நோய் (Paranoid Delusional Disorder)

இந்நோயால் பாதிக்கப்பட்டவர்கள் கொண்டிருக்கும் சந்தேகங்கள் உண்மை நிலைக்குப் புறம்பாகவும் தர்க்க ரீதியான விளக்கத்திற்கு மாறாகவும் இருக்கும். இந்நோய் பல வகையில் வெளிப்படலாம்.

1. ஒருவர் தம் எண்ணம், செயல், ஆகியவற்றை மற்றவர் இயக்கி வைப்பதாகத் தவறான நம்பிக்கை கொள்ளுதல்.

உதாதரணமாக :

எதிரிகள் செய்வினை, (பில்லி, சூனியம்) மூலம் அல்லது எக்ஸ்ரே, மின் கருவி மற்றும் கணினி மூலமாகத் தன்னுடைய சுயக்கட்டுப்பாட்டை இழக்கச் செய்து தன்னை இயக்கி வைப்பதாக ஒருவர் கருதுதல்)

2. தன்னைப் பற்றி மிகப் பெருமையாக எதார்த்தத்திற்குப் புறம்பாக ஒருவர் (தாம் ராஜ பரம்பரை என்றோ அல்லது தாம் கடவுளின் தூதர் என்றோ) கருதிச் செயல்படுவதும் இந்நோயின் அறிகுறியாகும்.

3. ஒருவர் தம்மைக் கொல்லப் பிறர் சதி தீட்டியதாக நினைத்துப் பிறரை எப்பொழுதும் சந்தேகத்துடன் கண்காணிப்பதும் தவறான நம்பிக்கை நோயின் அறிகுறியாக இருக்கலாம்.

4. தன்னைப் பிறர் பின் தொடர்வதாகவும், தன்னைப் பற்றிப் பிறர் ஜாடைமாடையாகப் பேசுவதாகக் கருதுவதும் ஒருவகையான சந்தேகம் ஆகும்.

5. தனது மனைவி / கணவனின் நடத்தையை ஒருவர் காரணமின்றிச் சந்தேகப்படுவதும் தவறான நம்பிக்கையினாலேயே.

6. ஒருவர் தம்மைச் சுற்றிச் சமூகத்துக்குப் புறம்பான செயல் நடப்பதாக எண்ணி அரசுக்கு அல்லது மேலிடத்துக்குத் தொடர்ந்து புகார் மனு அனுப்புவதும் ஒரு வகையான சந்தேகம் சார்ந்த தவறான நம்பிக்கையின் அடிப்படையிலே.

7. ஒரு சில குடும்பத்தில் ஒருவருக்குச் சந்தேகம், பயம் தோன்றும் பொழுது குடும்பத்தில் உள்ள அனைவரும் அதை நம்புவதும், நம்பிச் செயல்படுவதும் உண்டு.

## 2. சந்தேகம் சார்ந்த மனச்சிதைவு நோய் (Paranoid Schizophrenia)

இவ்வகை நோய் பெரும்பாலும் நடுத்தர வயதினருக்கே உண்டாகின்றது. தவறான நம்பிக்கைகள் இவர்களிடையே மேலோங்கி நிற்கும். அவைகள் மிகவும் பொருத்தமின்றியும், உண்மை நிலைக்குப் புறம்பாகவும் காணப்படும். எவ்வளவு தான் தர்க்க ரீதியாக விளக்கம் கொடுத்தாலும் கூட இந்தத் தவறான நம்பிக்கைகளை நோயாளியின் மனத்திலிருந்து நாம் அகற்றுதல் கடினம். காதில் மாயக்குரல் கேட்பதாகவும், அக்குரலானது தன்னை இயக்கி வைப்பதாகவும், குரல் தன்னைக் கேலி செய்வதாகவும், அவதூறு பேசுவதாகவும் இந்நோயாளிகள் கூறுவர். பிறர் தன்னைத் துன்புறுத்துவதாவும், தன் செயல்களைப் பிறர்

கண்காணிப்பதாகவும் எண்ணுவர். மேலும் பசியின்மையாலும், தூக்கமின்மையாலும் இவர்கள் அவதிப்படுவார்கள்.

**3. சந்தேகம் சார்ந்த பண்பியல் தொகுப்பு உள்ளவர் (Paranoid Personality Disorder)**

ஒரு சிலரிடையே சந்தேகம் சார்ந்த அறிகுறிகள் இயல்பிலேயே அதிகம் காணப்படும். மற்றவர்களின் சிறு கேலி கிண்டலையும் இத்தகைய பண்பு உள்ளவர்களால் தாங்கிக் கொள்ள இயலாது. இவர்கள் யாரோடும் வெளிப்படையாகப் பேசமாட்டார்கள். எதிலும் ரகசியம் காப்பவர்கள். தங்களைப் பற்றி உயர்வான, திடமான நம்பிக்கையை இவர்கள் கொண்டிருப்பார்கள். மேலும் கோபம், தனிமை, முரட்டுத்தனம், பிடிவாதம், நகைச்சுவைத் தன்மை இல்லாமை, சிறிய விஷயத்திற்கும் கூடுதல் கவனம் காட்டுதல், புகார் எழுதுவது போன்ற இயல்புகள் இவர்களிடையே காணப்படும். தனது மனைவி / கணவனின் நடத்தையில் சந்தேகம் கொண்டு சண்டை போடுவதும் இவர்கள் வழக்கமாகும். இவ்வகைப் பண்பியல் தொகுப்பு உள்ளவர்கள் சந்தேகம் கொண்ட மனச்சிதைவு நோய்க்கோ அல்லது சந்தேகம் கொண்ட தவறான நம்பிக்கை நோய்க்கோ ஆளாகலாம்.

## நோய் தோன்றக் காரணம்

மூளையில் சிந்தனை, பகுத்தறிவு, நம்பிக்கை, கண்ணோட்டம் கவலை, பயம் இவற்றைக் கட்டுப்படுத்தும் நரம்பில் டோபமைன் என்ற மூளை மின்னலைக் கடத்தியின் இராசயன சமநிலை பாதிக்கப்படும் பொழுது இவ்வகையான நோய் தோன்றுகிறது. மேலும் பாதுகாப்பற்ற குடும்பச் சூழ்நிலைகள், வாழ்க்கைப் பிரச்சினைகளாலும் சந்தேகம் உருவெடுக்கலாம். நீண்ட நாட்கள் கள், சாராயம் (ஆல்கஹால்), கஞ்சா மற்றும் இதர போதை மருந்துகள் உபயோகித்தாலும் சந்தேக நோய் ஏற்படலாம். டிமென்ஷியா என்ற ஞாபக சக்தி குறைவு நோயினாலும், சிபிலிஸ், எய்ட்ஸ் போன்ற பால்வினை நோய்கள் மூளையைத் தாக்கும் பொழுதும் சந்தேகங்கள் எழலாம். மேலும் சந்தேகமானது மனத்தளர்ச்சி (Depression) நோயின் அறிகுறியாகவும் இருக்கலாம் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

## கேமாரன் என்பவரின் கூற்றாவது :

குறைந்த பட்சம் சில சூழ்நிலைகள் சந்தேக நோய் உருவாவதற்கு வழிவகுக்கின்றன.

**அவையாவன :**

1. நம்பிக்கையின்மையும், சந்தேகத்தையும் அதிகரிக்கின்ற சூழ்நிலைகள்.

உதாரணம் : திரைத்துறையினரைக் காதலித்தல், இரவு நேரப் பணி. தாமதமாக வீட்டிற்கு வருதல்.

2. சமுதாயத்திலிருந்து தனிமைப்படுதல் (ஜாதி, மதம் மொழியால்) உதாரணம் : வெளியூரில் அல்லது வெளிநாட்டில் வேலை செய்தல்.

3. பொறாமையை அதிகரிக்கும் சூழ்நிலைகள். உதாரணம் : அழகான மணைவியை பணக்கார நண்பனுக்கு அறிமுகம் செய்து வைத்தல்.

4. தன்னுடைய குறைகளை மற்றவர்களிடம் காணத்தூண்டும் சூழ்நிலைகள்.

5. தன் மதிப்பைக் குறைக்கும் சூழ்நிலைகள் உதாரணம் : ஆண்மைக் குறைவு, தொழில் நட்டம்

6. நிகழக்கூடிய பல்வேறு அர்த்தங்கள், காரணிகள் ஆகியவற்றைப் பற்றி அதிகமாகச் சிந்திக்கும் ஆற்றலை அதிகரிக்கும் சூழ்நிலைகள். உதாரணம்: தோல்வி, இருள், தனிமை, வருமானத்திற்கு மீறிய பணப்புழக்கம், ஏமாற்ற மற்றும் தகராறு

**சிகிச்சை முறைகள்**

நோய் தோன்றிய ஆரம்ப காலத்திலேயே சிகிச்சை அளிப்பதுதான் மிகச் சிறந்தது. சந்தேக நோய்கள் சில சமயங்களில் திடீரென்று குறுகிய நாட்களுக்குள் தோன்றும். (அதாவது 2 வாரங்களுக்குள்) இவ்வகையான குறுகிய காலச் சந்தேக நோய்கள் வாழ்க்கை பிரச்சினைகளால் எழும்பொழுது எளிதில் குணமாக்கி விடலாம். நோயின் அறிகுறிகள் மாதக்கணக்கில் நீடித்து இருந்தால் சிகிச்சை என்பது நீண்ட நாள் ஆகும். எனினும் பலன் உள்ளதாக இருக்கும். நோயாளி தானாகவே மனநல மருத்துவரை அணுகுவது என்பது அரிது. ஏனெனில் தன்னுடைய சந்தேகம் தவறானது என்ற தன் அறிவு அல்லது தன் உணர்வு / தன் அறிவு (Insight) நோயாளிக்கு இருக்காது. சில சமயங்களில் உறவினரும் நோயாளியின் சந்தேகம் கலந்த குற்றச்சாட்டை நம்பி விடுவது உண்டு. உதாரணமாக : கணவன் பிற பெண்களுடன் தகாத உறவு கொண்டுள்ளான் என்ற குற்றச்சாட்டை அனைவரும் நம்பி விடுவர். இக்காரணத்தினால் பிணியாளரை மனநல மருத்துவரிடம் அழைத்துச் செல்வதில் தாமதம் ஆகலாம். நோயாளியின் நிலைமையைப் பொறுத்துப் புறநோயாளி பகுதியிலோ அல்லது மருத்துவமனையில் உள் நோயாளி பிரிவிலோ பிணியாளருக்குச் சிகிச்சை தரப்படுகிறது.

சிகிச்சையின் முதற்கட்டம் பிணியாளரின் பயத்தையும், பதட்டத்தையும், நோய் அறிகுறிகளின் தீவிரத்தையும் குறைப்பதே ஆகும். மேலும் தேவையென்றால் மின்னதிர்வு சிகிச்சையும் கொடுக்கப்படுகிறது. இவ்வகைச் சிகிச்சைக்குப் பின் விளைவுகள் ஏதுமில்லை.

சந்தேக நோயைக் குணப்படுத்துவதன் மூலம் சந்தேக நோயின் பின் விளைவுகளான (Psycho Social Sequlae) கணவன், மனைவியிடையே தகராறு, மணமுறிவு, தற்கொலை, கொலை, தொழில், நண்பர்களிடையேயும், உறவினர்களிடையேயும் ஏற்படும் மனத்தாங்கல் முதலியவற்றைத் தவிர்த்து உங்கள் வாழ்க்கையைச் சந்தேகத்திற்கு இடமின்றி நிம்மதியாகவும், சந்தோஷமாகவும், செழிப்பாகவும் வாழ வழி காணுங்கள்!

